அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 10/96

எனது இல. 1/543ஈ/02டி/09
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
1996.03.26

அமைச்சுக்களின் செயலாளர்கள் யாவருக்கும்.

**பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தாபனத்துடன் சேர்ந்த பிற நிருவாக நடவடிக்கைகள் தொடர்பாகவும், படிகள் மற்றும் பலவகைப்பட்ட கொடுப்பனவுகள் பற்றியும் செய்யப்படும் பிரதிநிதித்துவங்களும் ஆராய்வுகளும்.**

---

அரச சேவையின் தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பயன்படுத்த வேண்டிய விதிகள், நிதி ஒழுங்குகள், தாபன விதிக்கோவை, அமைச்சுக்களின் சுற்றறிக்கைகள் என்பவற்றை விசேட கவனத்துடன் பரிசீலித்து நாளாந்தம் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்குப் பதிலாக அவை மீது அவதானம் செலுத்தாமல் அத்தகைய விடயங்கள் தொடர்பான பிரச்சினைகள் அரசாங்க நிருவா
அமைச்சின் செயலாளரினதும் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அ[illegible]தானத்திற்குக் 
வரும் நிலை அதிகரித்து வருவதாகக் காணப்படுகிறது.

..2

02. மேற்படியான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பல அமைச்சுக்கள் அரசாங்க நிருவாக அமைச்சின் பிரதிநிதிகளைக் கொண்ட செயற்குழுக்களை அமைத்திருப்பதுடன் அத்தகைய செயற்குழுக்களில் பணியாற்றுவதற்காக அரசாங்க நிருவாக அமைச்சின் பிரதிநிதிகளை பெயர் குறிப்பிட்டு அனுப்புமாறு தொடர்ந்து என்னிடம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றது.

03. மேற்படி காரணங்களால் பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தமது பொறுப்பின் கீழ் தீர்மானங்கள் எடுப்பதில் தாமதிப்பதை போல் இந்த அமைச்சினால் கட்டாயமான முறையில் வழங்க வேண்டியுள்ள சேவைகளுக்கும் செயற்படுத்த வேண்டிய கருமங்களுக்கும் பாரிய தடைகள் ஏற்படுவது காணக் கூடியதாக உள்ளது.

04. தங்களின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிருவாக, தாபன நிதி அலுவல்களை ஒழுங்கமைக்கும் பூரண அதிகாரம் மற்றும் பொறுப்பும், சம் பந்தப்பட்ட விதிகளை தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்கு மற்றும் அமைச்சுக்களின் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக செயற்படுத்தும் பொறுப்பும் தங்களையே சாரு மென்பது வலியுறுத்தப்படுவதுடன், நடைமுறையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் தங்களின் ஒழுங்கமைப்பை திருத்த வேண்டுமென்று உத்தேசிக்கும் சந்தர்ப்பங்களில் தங்களின் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் நிருவாகத் துறைக் குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களைக் கொண்ட செயற்குழு மூலம் பரி சீலனை செய்து தீர்மானங்கள் எடுக்க வேண்டுமென்பதுடன், தற்போது நடைமுறை யிலுள்ள நிருவாக, தாபன அலுவல்கள் தொடர்பான ஒழுங்கு விதிகளை திருத்த வேண்டுமென்று கருத்துக்களை தெரிவிக்கும் போது மட்டும் அவற்றை அரசாங்க நிருவாக அமைச்சுக்கு சமர்ப்பிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். அவ்வா றான நடைமுறை மூலம் பொதுக் கொள்கைகளின் கீழ் ஒருமைப்பாடானதும் தர முடையதுமாக வேண்டிய திருத்தங்களையும் அரசின் அனுமதியையும் பெறுவதற்குரிய நடவடிக்கை இந்த அமைச்சு மூலம் எடுக்க முடியுமென்பதைசுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

05. மேற்குறிப்பிட்டுள்ள நடைமுறையை தங்களின் அமைச்சின் உத்தியோகத்தர் களினதும் தங்களின் கீழிருக்கும் திணைக்களத் தலைவர்கள் யாவரினதும் விசேட கவனத்திற்குக் கொண்டுவருமாறு வேண்டப்படுவதுடன் அம் முறையை கடைப்பிடிக்கு மாறு பொறுப்பாகவுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களாகிய தங்களிடம் நான் தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

---

ஒப்பம்; வை. பி. புஸ்ஸெதெனிய.
பதில் செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.

ரசி/